www.tamilarangam.net

# அரசியல் தீர்வையும் சமாதானத்தையும் வற்புறுத்துவோம்!

## அமெரிக்காவின் தலையீட்டை எதிர்ப்போம்!

## சமாதானத்தின் விரோதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும்!!

- அரசாங்கம்-புலிகள் இயக்கம் கையெழுத்திட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் வரவேற்கப்படவேண்டிய தாகும். யுத்த நிறுத்தமும், தடைகள்-கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையும், பாதைகள் திறக்கப்பட்டு உள்ளதும் வடக்கு கிழக்கு மக்கள் உட்பட நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஆறுதலும் நம்பிக்கையும் தரும் நியாயமான நடவடிக்கைகளாகும்.

- இத்தகைய ஒப்பந்தத்தையும் அதற்கான நடைமுறைகளையும் இரு தரப்பினரும் மதித்து யுத்த நிறுத்தத்தை நிரந்தரமாக்குதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்காது, முறித்துக்கொள்ளாது அல்லது நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து விடாது இரு தரப்பினரும் உறுதியுடன் முன்செல்ல வேண்டும்.

- சமாதானத்திற்காக ஏற்பட்டுள்ள இவ் இறுதிச் சந்தர்ப்பத்தையும் புதிய சாதகமான சூழலையும் குழப்பிக் கொள்வதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதியும் பங்காளிகளாக மாறிவிடக் கூடாது. இனப் பிரச்சினைக்கான கடந்தகாலத் தீர்வு முயற்சியில் வழமையாகக் கையாண்டு வந்த பழிக்குப்பழி என்ற எதிர்ப்பு நிலைப்போக்கைக் கைவிட்டு தூரநோக்குடனான அரசியல் பாதையில் செல்ல வேண்டும். அதனையே நாடும் பல்லின மக்களும் வேண்டுகிறார்கள் என்னும் அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து பொதுசன முன்னணி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

- ஒப்பந்தத்தையும் அதன் மூலமான யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை என்பவற்றைக் குழப்பிச் சீர்குலைக்கும் நோக்குடன் செயலாற்றி வரும் ஜே.வி.பி., சிஹல உறுமய மற்றும் பேரினவாத சக்திகளின் தீய உள்நோக்கம் கொண்ட சகலவகை எதிர்ப்பு முயற்சிகளையும் சிங்கள மக்கள் கண்டித்து நிராகரிக்க வேண்டும்.

- அரசாங்கமும் புலிகள் இயக்கமும் காலதாமதம் செய்யாது அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்க வேண்டும். இரு தரப்பும் இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகள் தோற்றுவித்துள்ள அரசியல் பொருளாதார யதார்த்தங்களைப் புரிந்து கொண்டு பேச்சுவார்த்தையில் விட்டுக்கொடுப்பு புரிந்துணர்வுடன் நியாயமான தீர்வு நோக்கி முன்செல்ல வேண்டும்.

- அரசாங்கம் முன்னைய கால நிலைப்பாடு போன்று ஒற்றையாட்சியை வற்புறுத்தி நிற்காது நாட்டின் பல்லினத் தேசியத்தை ஏற்றுக்கொண்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிக்கு முன்வரல் வேண்டும். அதே வேளை புலிகள் இயக்கம் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வதுடன் ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமை உட்பட மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறே வடக்கு கிழக்கில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களின் அடிப்படை ஜனநாயக வாழ்வுரிமைகளை ஏற்று உறுதி செய்து கொள்ளல் வேண்டும். அதன், மூலமே கடந்த காலத்தின் அர்ப்பணிப்பும் தியாகங்களும் நிறைந்த போராட்டங்களுக்கான உரிய அறுவடையை நியாயமான தீர்வாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

- இவ்வாறான தீர்வில் வடக்கு கிழக்கின் முஸ்லீம் மக்களின் தன்னடையாளம் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய வகையிலான அடிப்படை அம்சங்கள் உறுதி செய்யப்படல் வேண்டும். அவ்வாறே இன்றைய சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் இனத்துவ ஜீவாதார உரிமைகளுக்கான தீர்வுகள் தேடப்படுவதும் அவசியமானதாகும்.

- உலக மேலாதிக்க பிராந்திய மேலாதிக்க சக்திகளின் உள்ளார்ந்த நோக்கங்களுக்கு அரசாங்கமும் புலிகள் இயக்கமும் பலியாகிக் கொள்ளக் கூடாது. கடந்த கால அனுபவங்கள் பட்டறிவுகளைத் தந்த படிப்பினைகளாகக் கொண்டு நிதானத்துடனும் தூர நோக்குடனும் பேச்சுவார்த்தை ... பயன ... வகையில் முன்னெடுத்தல் வேண்டும்.

- நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணைக்கும் மேலாக இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்கா தன் ஆதிக்க நலன் கருதிய தலையீட்டுக்கான கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது. கடந்த இருபது வருட கால இன யுத்தத்தில் அமெரிக்காவின் ஆலோசனைகள் உதவிகள் வழிகாட்டல்கள் ஒத்துழைப்புகள் இருந்து வந்ததை நாடும் மக்களும் நன்கறிந்தவைகளாகும். ஆனால் இன்று அதே அமெரிக்கா சமாதான வேடமணிந்து நிற்பது தனது ஆதிக்க இருப்புக்கான ஒன்றேயாகும். எனவே அமெரிக்காவின் தலையீட்டு ஊடுருவல் முயற்சிகளுக்கு எதிராகத் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களும் அரசியல் சமூக சக்திகளும் ஒன்றுபட்டு நிற்பது அவசியமாகும். இதில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியம் மிக்க இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் முன்னணியில் நின்று போராடுவது காலத்தின் தேவையாகும்.

*யுத்த நிறுத்தம் நீடிக்கட்டும்* — *பேச்சுவார்த்தை தொடங்கட்டும்*

*அரசியல் தீர்வு வெல்லட்டும்.* — *சமாதானம் மலரட்டும்*

## புதிய-ஜனநாயக கட்சி

25-03-2002
கொழும்பு.

புதிய-ஜனநாயக கட்சிக்காக இல. 217, மோதர வீதி, கொழும்பு 5 சோப்டெக் கிரபிக்ஸ் ஸ்தாபனத்தால் அச்சிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# සැබෑ සාමයක් උදෙසා වන දේශපාලන විසඳුමකට බල කරමු!

## ඇමෙරිකන් මැදිහත් වීමකට ඉඩ නො දෙමු !!

## සාම විරෝධී බලවේග පිටු දකිමු !!!

- දශක දෙකක පමණ කාලයක් පුරා විශේෂයෙන් ම උතුරු නැගෙනහිරත් පොදුවේ මුළු රටේමත් ජනතාව ගේ ජීවත් වීමේ අයිතින් පැහැර ගත් යුද්ධය එල්ටීටීඊයත් ආණ්ඩුවත් ගිවිස ගත් අවබෝධතා ගිවිසුම මගින් නතර වී එහි කුරිරු පීඩාවන්ට ගොදුරු වූ ජන ජීවිතය යථා තත්ත්වයට පත්වන්නට පටන් ගෙන තිබේ. සාමය පිළිබඳ බලාපොරොත්තු සැක සංකා මැද්දේ නමුත් දැල් වෙන්නට පටන් ගෙන තිබේ. අවබෝධතා ගිවිසුම සාමය සඳහා පෙරට යන්නට යහපත් ආරම්භයකි.

- එහෙත් මෙම ගිවිසුමත් යුද විරාමයත් කඩා දමන්නට යුදවාදී හා පටු ජාතිවාදී බලවේග ද යුද්ධයෙන් වාසි ලබන බලවේග ද යනා දී බලවේග සෘජුව මෙන් ම වක්‍රව ද ක්‍රියා කරති. සාමය පිළිබඳ බලාපොරොත්තු සාක්ෂාත් කර ගන්නට නම් මෙම බලවේගයන්ගේ තෙරපුම් වලට, කඩාකප්පල්කාරී හා කුමන්ත්‍රණකාරී ක්‍රියා වලට යටත් නොවී පෙරට යාම දෙපාර්ශවයේ ම විශේෂයෙන් ම ආණ්ඩුවේ වගකීමකි.

- පොදු පෙරමුණු ආණ්ඩුව ද මෙලෙස ම සාම ක්‍රියාදාමයකට අත ගැසී ය. නමුත් ඉහත කී බලවේගයන්ගේ තෙරපුමට යටත් වීම නිසා සිදු වූයේ එය බිඳ වැටීම ය. ඊට වත්මන් ආණ්ඩු පක්ෂයද වගකිව යුතුය. දැන් එලෙස ම ඉහත කී බලවේග ද අභියම් ලෙස පොදු පෙරමුණ ද වත්මන් සාම ප්‍රයත්නයට බාධා කරන්නට පටන් ගෙන තිබේ. මේ පටු දේශපාලන වාසි බලා ක්‍රියා කළ යුතු අවස්ථාවක් නොවේ. පොදු පෙරමුණට ද ජනාධිපතිවරියට ද මේ අවස්ථාවේ විශාල වගකීමක් පැවරේ. එනම් පටු දේශපාලන වාසි නො බලා මේ ප්‍රයත්නය සම්බන්ධයෙන් සාධනීය ප්‍රවේශයක් ගැනීම ය. එය කල් පවත්නා සාමයක් ඇති කර ගැනීමට මහත් පිටි වහලක් වනු ඇත.

- වමේ යයි කියා ගන්නා ජවිපෙය මෙහි දී හැසිරෙන ආකාරය පිළිකුල් සහගතය. එය මහජාතිවාදී සිහළ උරුමය හා වෙනත් යුදවාදී, බලවේගයන්ටත් වඩා පෙරට පැන රට කළඹන්නට දරණ ප්‍රයත්නය නියම බෙදුම්වාදයටත් එකිනෙකා මරා ගන්නා යුද්ධයටත් චිරස්ථායී බවක් ලබා දීම මිස වෙනත් ප්‍රතිඵලයක් ගෙන දෙන්නේ නැත. සිංහල ජනතාවගේ වගකීම වන්නේ මෙබදු උද්ඝෝෂණයන්ගේ ගොදුරු බවට පත්වීම නොව සාමය සඳහා තැබූ පියවර ආපසු නො ගෙන පෙරට ම යන ලෙස පාලකයන්ට බල කර කියා සිටීම ය.

- විසඳුමක් සඳහා යන්නට පාලකයන්ට දැඩි ලෙස බල නො කළ නිසා, ජාතිවාදී, යුදවාදී බලවේගයන් ගේ බලපෑමට ගොදුරු වූ නිසා සිදුව ඇත්තේ මැදිහත්කරුවන් ලෙස විදෙස් බලවේග කැඳවා ගැනීමට ය. දැන් නොර්වේ ආවා කීමෙන් වැඩක් නැත. ඇමෙරිකාව ද දැන් සෘජුවම ප්‍රශ්නයට මැදිහත් වී තිබේ. ආණ්ඩුව ඊට කැමති වනු ඇත. එහෙත් එය කිසිදු අයුරකින් මෙරට කිසිදු ජන කොටසකට යහපතක් ගෙන දෙන්නේ නැත. එහෙයින් මේ අවස්ථාවේ ඇමෙරිකාව සෘජුව මැදිහත් වීමටත්, ආණ්ඩුව ඇමෙරිකාව ගෙන්වා ගැනීමටත් දරණ ප්‍රයත්නයටත් එරෙහිව සාධාරණ දේශපාලන විසඳුමක් මගින් සාමය සඳහා පෙරට යන්නට ආණ්ඩුවට බල කිරීම වමේ හා සෙසු ප්‍රගතිශීලී බලවේගයන්ගේ වගකීම වේ.

- ආණ්ඩුව සාධාරණ දේශපාලන විසඳුමකට යාමෙහිලා තිරසාර බවක් නො දක්වයි. එය ඒකීය ලංකාවක් ගැන කරන අවධාරණය සාධාරණ දේශපාලන විසඳුමකට ආධාර කරන්නේ නැත. ලංකාව බහු වාර්ගික රටක් ලෙස පිළි ගෙන ස්වයං තීරණ අයිතිය, සමානත්වය හා උතුරු නැගෙනහිර ස්වයං පාලනයක් යන එකඟතාවයන් ගෙන් තොරව ප්‍රශ්නයට විසඳුමක් හා සාමයක් ගැන සිතිය නො හැකි ය.

- ඒකීය ලංකාවක් වැනි ඒවා කිය කියා කල් මැරුවොත් සිදු වන්නේ 96 සාම ප්‍රයත්නයට අත් වූ වාටත් වඩා නරක ඉරණමක් අත්වීම ය. ආණ්ඩුවට කල් මරන්නට ඉඩ දී බලා සිටීම වාම හා ප්‍රගතිශීලී බලවේගයන්ගේ කාර්යය නො විය යුතු ය. සංයුක්ත යෝජනා සහිතව දේශපාලන විසඳුමක් සඳහා අප්‍රමාදව පියවර ගන්නට ආණ්ඩුවට බල කළ යුතු ය.

- අනෙක් අතට එල්ටීටීඊය ට ද මෙහිලා විශාල වගකීමක් පැවරේ. ඇමෙරිකානු මැදිහත් වීම් වලට ඉඩ නො දෙන සේ ක්‍රියා කිරීම එහි වගකීමක් වන අතර ප්‍රජාතන්ත්‍රවාදයට, මානව අයිතීන්ට හා විකල්ප අදහස් වලට ගරු කරමින් ද සෙසු බලවේගයන්ට අවකාශ දෙමින් හා ඔවුන් සමග එක්සත් වෙමින් ද දෙමළ ජනතාවගේ අයිතීන් දිනා ගැනීමට කටයුතු කළ යුතු ය.

- එමෙන් ම උතුරු නැගෙනහිර ජීවත්වන සිංහල, මුස්ලිම්, කඳුරට දෙමළ යන ජනතාවන්ගේ ජීවත් වීමේ අයිතියට හා ප්‍රජාතන්ත්‍රවාදී අයිතියට ගරු කළ යුතු ය. ඔවුන් ගේ ජීවත් වීමේ අයිතිය තහවුරු කළ යුතු ය. මේවා නො මැතිව දෙමළ ජනතාවගේ අරගලය සපල වේ යයි කිව නො හැකි ය.

- එලෙසම දේශපාලන විසඳුමකට පහත සඳහන් දෑ ද එනම් 1. උතුරු නැගෙනහිර ජීවත් වන්නා වූ මුස්ලිම් ජනයාගේ අනන්‍යතාවය තහවුරු කරන්නාවූ ද, 2. කඳුරට දෙමළ ජනතාවගේ ජාතික අභිලාෂයන් තහවුරු කරන්නා වූ ද පියවර ඇතුළත්විය යුතු ය.

## නව - ප්‍රජාතන්ත්‍රවාදී පක්ෂය

2002.03.25
කොළඹ.

නව-ප්‍රජාතන්ත්‍රවාදී පක්ෂය වෙනුවෙන් අංක 217, මෝදර වීදිය, කොළඹ 15. සොජ්වෙක් ග්‍රැෆික්ස් ආයතනය විසින් මුද්‍රණය කරන ලදී.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்